

மதுராந்தகம் சட்டமன்ற இடைத்தேர்தலில் போட்டியிடும் தி.மு.க. வெற்றி வேட்பாளர் இ.பரந்தாமன் அவர்களை ஆதரித்து, கழக துணைப் பொதுச் செயலாளர் முன்னாள் அமைச்சர் க. பொன்முடி, சேலம் மத்திய மாவட்டச் செயலாளர் முன்னாள் அமைச்சர் இரா. இராஜேந்திரன் ஆகியோர் சேலம் மத்திய மாவட்ட கழகத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள மதுராந்தகம் வடக்கு ஒன்றியத்திற்குட்பட்ட நெல்வயல் ஊராட்சிக்குட்பட்ட வாக்குச்சாவடி 1,2, மங்கலம் ஊராட்சிக்குட்பட்ட வாக்குச்சாவடி 3,4 ஆகிய ஊராட்சிகளில் உள்ள பொதுமக்களை நேரில் சந்தித்து உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகளை சேகரித்தனர். அருகில் மதுராந்தகம் வடக்கு ஒன்றிய செயலாளர் P.H.சத்யா சாய், சேலம் மத்திய மாவட்ட கழக நிர்வாகிகள், ஊராட்சி கிளைக் கழக நிர்வாகிகள் மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகள் உள்ளனர்.



மதுராந்தகம் சட்டமன்ற தொகுதி மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி வெற்றி வேட்பாளர் இ.பரந்தாமன் அவர்களை ஆதரித்து அருங்குணம் ஊராட்சியில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டச் செயலாளர் முன்னாள் அமைச்சர் தா.மோ.அன்பரசன், வீடுவீடாக சென்று பொதுமக்களை நேரில் சந்தித்து உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகளை சேகரித்தார். அருகில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி, என். சந்திரன், ப.குணாளன், டி.பாபு, ஜி.கே.ரவி, கோல்டு டி.பிரகாஷ், எல்.பிரபு, கே.பி.முரளிகிருஷ்ணன், செல்வேந்திரன், நடராஜன், சாலமன் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

### 2022ம் ஆண்டு முதல் நடப்பு ஆண்டு வரை

# நாடு முழுவதும் 33 எம்.பி.க்கள், 78 எம்.எல்.ஏ.க்கள் கட்சி தாவல்!

## 111 மக்கள் பிரதிநிதிகள் அணி மாறியுள்ளனர்!

புதுடெல்லி, செப்.27-

இந்தியாவில் 2022ம் ஆண்டு முதல் 111 எம்.பி. மற்றும் எம்.எல்.ஏ.க்கள் எதிர்க்கட்சிகளுக்கு தாவியுள்ளதாக ஜனநாயக சீர்திருத்தங்களுக்கான சங்கம் பகீர் தகவலை வெளியிட்டுள்ளது.

இந்தியாவில் தேர்தல் களத்தில் மக்களின் வாக்குகளைப் பெற்று வெற்றி பெறும் அரசியல்வாதிகள், தங்களின் சொந்த நலனுக்காகவும் அதிகாரத்திற்காகவும் அவ்வப்போது எதிர்க் கட்சிகளுக்கு தாவுவது தொடர்கதையாக இருந்து வருகிறது. இதனைத் தடுக்கும் வகையில் கட்சித் தாவல் தடைச் சட்டம் நடைமுறையில் இருந்தாலும், பல்வேறு வழிகளில் மக்கள் பிரதிநிதிகள் கட்சி மாறுவது வாடிக்கையாகி விட்டது. இந்த சூழலில், கடந்த 2022ம் ஆண்டு முதல் தற்போது வரையிலான காலகட்டத்தில் மக்கள் பிரதிநிதிகளின் அணி மாறுதல் நடவடிக்கைகள் குறித்து ஜனநாயக சீர்திருத்தங்களுக்கான சங்கம் (ஏ.டி.ஆர்.) தீவிர ஆய்வு மேற்கொண்டு வந்தது.

அந்த ஆய்வறிக்கையில் வெளியாகியுள்ள புள்ளிவிவரங்கள் இந்திய அரசியலில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளன. நாடு முழுவதும் கடந்த 2022ம் ஆண்டு முதல் 2026ம் ஆண்டு வரையிலான காலகட்டத்தில், 26 மக்களவை எம்.பி.க்கள், 7 மாநிலங்களவை எம்.பி.க்கள் மற்றும் 78 எம்.எல்.ஏ.க்கள் என மொத்தம் 111 மக்கள் பிரதிநிதிகள் அணி மாறியுள்ளனர். இதில் சுயேச்சையாக கட்சி தாவியவர்கள், ஒட்டு மொத்த கட்சியை இணைத்தவர்கள், பதவியை ராஜினாமா செய்துவிட்டு இடைத்தேர்தலில் வென்றவர்கள் மற்றும் தகுதி நீக்கம் செய்யப்பட்டு மீண்டும் தேர்வானவர்கள் அடங்குவர். அதிகபட்சமாக நாகாலாந்து மாநிலத்தில் ஆளும் தேசியவாத ஜனநாயக முற்போக்கு கட்சியுடன் ஏற்பட்ட அரசியல் உடன்பாடு காரணமாக 32 எம்.எல்.ஏ.க்கள் கட்சி மாறியுள்ளனர்.

இவ்வாறு கட்சி மாறிய மக்கள் பிரதிநிதிகளை வளைத்துப் போட்டதில் நாகா மக்கள் முன்னணி (என்.பி.எப்.) 32 பேருடனும், பாஜக 29 பேருடனும் அடுத்தடுத்த முன்னிலை இடங்களில் உள்ளன. மேலும் என்.சி.பி.ஐ. கட்சிக்கு 20 பேரும், காங்கிரசுக்கு 9 பேரும், உத்தவ் தாக்கரேவின் சிவசேனா அணிக்கு 8 பேரும், என்.பி.பி.க்கு 6 பேரும், அருணாச்சல மக்கள் கட்சிக்கு 4 பேரும் சென்றுள்ளனர். அதாவது கட்சி மாறிய 111 பேரில் 81 பேர், அதாவது 73 சதவீதம் பேர் என்.பி.எப்., பாஜக மற்றும் என்.சி.பி.ஐ. ஆகிய மூன்று கட்சிகளிலேயே தஞ்சம் புகுந்துள்ளனர். தெலங்கானாவில் பி.ஆர்.எஸ். கட்சியைச் சேர்ந்த 9 எம்.எல்.ஏ.க்கள் காங்கிரசிலும், கோவாவில் காங்கிரஸ் எம்.எல்.ஏ.க்கள் 8 பேர் பாஜகவிலும் ஐக்கியமாகினர். பஞ்சாபில் 6 மாநிலங்களவை எம்.பி.க்கள் உள்பட 8 பேரும், மகாராஷ்டிராவில் உத்தவ் அணியில் இருந்து 6 மக்களவை எம்.பி.க்களும் அணி மாறியுள்ளனர்.

இதனிடையே, மேற்கு வங்கத்தில் திரிணாமுல் காங்கிரஸ் கட்சியில் இருந்து வெற்றி பெற்ற 20 எம்.பி.க்கள் தேசியவாத இந்திய குடிமக்கள் கட்சிக்கு (என்.சி.பி.ஐ.) ஒட்டு மொத்தமாக இடம் பெயர்ந்துள்ளனர்.

இதுகுறித்து அவர்கள் தெரிவிக்கையில், 'நாங்கள் தனிப்பட்ட முறையில் கட்சி தாவவில்லை, எங்கள் பிரிவை முறைப்படி கட்சியாக இணைத்துள்ளோம்' என்று விளக்கம் அளித்துள்ளனர். இந்த விவகாரம் தொடர்பான மனு தற்போது மக்களவை சபாநாயகர் ஓம் பிர்லா அவர்களின் பரிசீலனையில் உள்ளது. இதுதவிர மேகாலயா, மணிப்பூர், குஜராத் உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களிலும் மக்கள் பிரதிநிதிகள் அணி மாறியுள்ள நிலையில், வாக்களித்த மக்களை ஏமாற்றும் வகையில் அரங்கேறும் இந்த பதவி வேட்டை கலாசாரத்திற்கு முற்றுப்புள்ளி வைக்க தேர்தல் சீர்திருத்தங்கள் கடுமையாக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை வலுத்துள்ளது.

### நடிப்பவர்களுக்கு வாக்களித்தால் மக்கள் பிரச்சினை தீராது!

# மக்களுக்காக உழைக்கக் கூடியவர்களுக்கு துணை நில்லுங்கள்!

## தே.மு.தி.க. பொதுச் செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் எம்.எல்.ஏ. பேட்டி!



விருத்தாச்சலம், செப்.27-

நடிப்பவர்களுக்கு வாக்களித்தால் மக்கள் பிரச்னை தீராது என்று தே.மு.தி.க. பொதுச்செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் கூறினார்.

தே.மு.தி.க. பொதுச்செயலாளரும் எம்.எல்.ஏ.வுமான பிரேமலதா விஜயகாந்த் விருத்தாச்சலத்தில் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

ஆளுங்கட்சி களத்திற்கு வராமல் அங்கேயே உட்கார்ந்து கொண்டு பேசிக்கொண்டிருந்தால் வேலைக்கு ஆகாது. மக்கள் ஓட்டு போட்டு இருக்கிறார்கள். அனைவரும் களத்திற்கு வர வேண்டும். நேரடி நெல் கொள்முதல் நிலையத்தில் சுமை தூக்கும் தொழிலாளர்களுக்கு ஒரு மூட்டைக்கு பத்து ரூபாய் என்பது பத்தாது. விலைவாசி அந்த அளவிற்கு ஏறி விட்டது. இதில் அரசு கவனம் செலுத்த வேண்டும். ஆனால் அரசின் கவனம் வேறு எங்கேயோ இருக்கிறது. இடைத்தேர்தல் வேறு வந்துவிட்டது. தேவையில்லாமல் ராஜினாமா செய்து இவர்களாகவே ஒரு இடைத்தேர்தலை கொண்டு வந்து விட்டார்கள்.

நேர விரயம் பண விரயம் தான். லஞ்சமே இல்லாத நேர்மையான ஆட்சி என்கிறார்கள். யார் மக்களுக்காக பேசுகிறார்கள், யார் மக்களுக்காக உழைக்கிறார்கள் என்பதை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும். ரீல்ஸ் போடுவது, போட்டோ ஷூட் பண்ணுவது இவர்களைதான் மக்கள் நம்புகிறார்கள். யார் மக்களை நேசிக்கிறார்கள், யார் மக்களுக்காக உழைக்கிறார்கள் என்று பார்த்து அவர்களுக்கு மக்கள் துணை நில்லுங்கள், நடிப்பவர்களுக்கு வாக்களித்தால் மக்கள் பிரச்னை தீராது.

இவ்வாறு அவர் கூறினார்.

### நாடு முழுவதும் 28, 29, 30ம் தேதிகளில் வங்கிகள் வேலைநிறுத்த எதிரொலி!

# அனைத்து வங்கிகளும் இன்று இயங்கும் என அறிவிப்பு!

சென்னை, செப்.27-

பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி நாடு முழுவதும் வங்கி ஊழியர்கள் வரும் 28, 29, 30ம் தேதி என 3 நாட்கள் ஸ்டிரைக்கில் ஈடுபடுகின்றனர். இதன் எதிரொலியாக இன்று (ஞாயிற்றுக்கிழமை) அனைத்து வங்கிகளும் இயங்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக வாடிக்கையாளர்களுக்கு எஸ்.எம்.எஸ். மூலம் வங்கிகள் தகவல் அனுப்பி வருகிறது. அதே நேரத்தில் ஸ்டிரைக் அன்று ஏ.டி.எம்.களுக்கான சேவை கட்டணம் ரத்தாகிறது.

வங்கி வேலை நாட்களை 5 ஆக குறைக்க வேண்டும், ஊக்கத்தொகைகளை சமமாக வழங்க வேண்டும் உள்ளிட்ட கோரிக்கையை வலியுறுத்தி நாடு முழுவதும் உள்ள தேசிய வங்கிகளின் அலுவலர், ஊழியர் சங்கங்களின் கூட்டு நடவடிக்கை குழு சார்பில் வரும் 28ம் தேதி முதல் 30ம் தேதி வரை வேலை நிறுத்தத்தில் ஈடுபட முடிவு செய்துள்ளனர். இந்த வேலை நிறுத்த போராட்டத்தில் இந்தியா முழுவதும் ஒரு லட்சம் வங்கிக் கிளைகளில் பணியாற்றும் 8 லட்சம் ஊழியர்கள், அதிகாரிகள் பங்கேற்க உள்ளனர். தமிழகத்தை பொறுத்த வரை 18,000 வங்கி கிளைகள் செயல்பட்டு வருகின்றன. இதில் பணியாற்றும் 60,000 பேர் போராட்டத்தில் பங்கேற்க உள்ளனர்.

மாதத்தின் கடைசி 3 நாட்கள் வேலை நிறுத்தத்தை அறிவித்துள்ள நிலையில் அதனைச் சார்ந்த சனி, ஞாயிறு அரசு விடுமுறை நாட்களாக இருப்பதால் 5 நாட்கள் வங்கிகள் மூடப்படும் நிலை உருவானது. 26ம் தேதி முதல் 30ம் தேதி வரை வங்கிகள் தொடர்ந்து செயல்படாமல் போனால் மிகப்பெரிய அளவில் பாதிப்பு ஏற்படும் நிலை ஏற்பட்டது. அதாவது நாடு முழுவதும் உள்ள வங்கிகளை சார்ந்துள்ள வர்த்தக பணிகள், காசோலை பரிமாற்றங்கள், அன்னிய செலாவணி உள்ளிட்ட பல்லாயிரம் கோடி மதிப்பிலான பரிவர்த்தனைகள் முடங்கும் நிலை ஏற்பட வாய்ப்பு இருந்தது.

அதனைக் கருத்தில் கொண்டு மத்திய நிதித்துறை வங்கி ஊழியர்களின் வேலை நிறுத்தத்திற்கு முந்தைய இன்று (ஞாயிற்றுக்கிழமை) அனைத்து வங்கிகளும் செயல்படும் என்று மத்திய அரசு அறிவித்துள்ளது. அதன்படி நாளை ஞாயிற்றுக்கிழமை வங்கிகள் வழக்கம் போல செயல்பட உள்ளது. இந்த விவகாரத்தில் பொதுத்துறை வங்கிகளும் வாடிக்கையாளர்களை உஷார்படுத்தி குறுந்தகவல்களை அனுப்பி வருகின்றன. அதில், அன்பார்ந்த வாடிக்கையாளர்களே, செப்டம்பர் 28ம் தேதி முதல் 30ம் தேதி வரை வங்கி வேலை நிறுத்தம் நடைபெறுவதையொட்டி, உங்கள் வங்கி சேவைகளுக்காக வங்கி கிளைகள் செப்டம்பர் 27ம் தேதி(நாளை) ஞாயிற்றுக்கிழமை அன்று வழக்கம் போல் செயல்படும்" என்ற வாசகம் இடம் பெற்றுள்ளது.

இதே போன்று, வேலை நிறுத்தத்துக்கு முன்பு அத்தியாவசிய வங்கி பரிவர்த்தனைகளை முடித்துக்கொள்ளுமாறு வங்கிகளும், வாடிக்கையாளர்களை அறிவுறுத்தி உள்ளன. மேலும் பண தேவைகளுக்கு தங்கள் வங்கிகளின் ஏடிஎம் மையங்கள் மற்றும் இன்டர்நெட் பேங்கிங், யு.பி.ஐ. உள்ளிட்டவற்றை பயன்படுத்துமாறும் கேட்டுக்கொண்டுள்ளன. இந்த விவகாரத்தில் பாரத ஸ்டேட் வங்கி, பாங்க் ஆப் இந்தியா உள்பட பல்வேறு பொதுத்துறை வங்கிகளும், தனியார் வங்கிகளும் தங்கள் வாடிக்கையாளர்களை உஷார்படுத்தி குறுந்தகவல்களை அனுப்பி வருகின்றன.

இந்த நிலையில், ஸ்டிரைக் அறிவிக்கப்பட்ட 3 நாட்களும் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் சேவைகள் முற்றிலும் முடங்கும் நிலை உள்ளது. இதையடுத்து, வரும் திங்கள் முதல் புதன் கிழமை வரை எவ்வித கட்டணமும் இல்லாமல் ஏடிஎம் சேவை வழங்கப்படும் என பொதுத்துறை வங்கிகள் அறிவித்துள்ளன. வாடிக்கையாளர்கள் கணக்கு வைத்து இருக்கும் ஏடிஎம்மில் மாதத்திற்கு 5 முறையும், பிற வங்கிகளின் ஏடிஎம்களில் மாதத்திற்கு 3 முறையும் கட்டணமின்றி பணம் எடுக்கலாம். அதற்கு மேல் ஏடிஎம்மில் பணம் எடுத்தால் ஒரு பரிவர்த்தனைக்கு 23 ரூபாய் வரை கட்டணம் வசூலிக்கப்படுகிறது.

இந்நிலையில், வங்கி ஊழியர்கள் வேலை நிறுத்தம் நடைபெறும் இந்த மூன்று நாட்களில் இந்த சேவைக் கட்டணம் வசூலிக்கப்படாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. பெரும்பாலான வங்கிகளுடன் உள்ள ஏடிஎம்களில் வங்கி ஊழியர்கள் தான் பணத்தை நிரப்புவார்கள். அவர்கள் ஸ்டிரைக்கில் ஈடுபடுவதால் ஏடிஎம்களில் பணம் நிரப்புதல் பணிகள் பாதிக்கப்படும். இதனால், ஏடிஎம்கள் இயங்குமா? என்ற சந்தேகமும் ஏற்பட்டுள்ளது. சென்னையை பொறுத்தவரை ஒரு நாள் வங்கி விடுமுறை என்றாலே பெரும்பாலான ஏடிஎம்களில் மாலை 5 மணிக்கு மேல் பணம் இல்லை என்ற போர்டுகளே காணமுடிகிறது. இந்த நிலையில் தொடர் விடுமுறை வருகிறது. இதனால் உடனுக்குடன் ஏடிஎம்கள் பணம் தீரும் நிலை ஏற்பட்டுள்ளது. எனவே, ஏடிஎம்களில் உடனுக்குடன் பணத்தை நிரப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வாடிக்கையாளர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

### முதல்வர் விஜய் தொகுதியான பெரம்பூரில்

# மின்வெட்டைக் கண்டித்து நள்ளிரவில் மக்கள் சாலை மறியல்!

## மின் வாரிய ஊழியர்கள் அலட்சியம்!

பெரம்பூர், செப்.26

சென்னை கொளத்தூர் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட தீட்டித்தோட்டம் பகுதியில் நேற்று அதிகாலை 1 மணி முதல் மின்சாரம் துண்டிக்கப்பட்டது.

இதனால் அப்பகுதி மக்கள் வீட்டைவிட்டு வெளியே வந்து காத்திருந்தனர். ஆனால் அதிகாலை 4 மணி வரை மின்சாரம் வராததால் பெண்கள் உட்பட 50க்கும் மேற்பட்டவர்கள் பெரம்பூர் பேப்பர் மில்ஸ் சாலையில் உள்ள மின்சார வாரிய அலுவலகத்திற்கு முன்பாக பேப்பர் மில்ஸ் சாலையில் சாலை மறியலில் ஈடுபட்டனர். போக்குவரத்து பாதிக்கப்பட்டு பரபரப்பான சூழ்நிலை நிலவியது.

இது பற்றி தகவல் கிடைத்ததும் அங்கு பாதுகாப்பு பணியில் இருந்த எம்.கே.பி. நகர் இன்ஸ்பெக்டர் ஆனந்தகுமார் தலைமையில் போலீசார் வந்து மறியல் நடத்தியவர்களை சமாதானப்படுத்தினர்.

'மின்வாரிய ஊழியர்கள் வந்தால்தான் கலைந்து செல்வோம்' என்று தெரிவித்து தொடர்ந்து சாலை மறியலில் ஈடுபட்டனர்.

மின்வாரிய உதவி பொறியாளர் நிரோஷா உள்பட அதிகாரிகள் வந்து பேச்சுவார்த்தை நடத்தி உடனடியாக மின்சாரம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று உறுதி அளித்தனர்.

இதையடுத்து பொதுமக்கள் அங்கிருந்து கலைந்து சென்றனர். பொதுமக்கள் கூறுகையில், "தினமும் எங்களது பகுதியில் இரவு நேரங்களில் மின்சாரம் துண்டிக்கப்படுகிறது. பலமுறை போன் செய்தாலும் மின்வாரிய ஊழியர்கள் உரிய பதில் அளிப்பது கிடையாது. இன்று காலை 1 மணி முதல் நான்கு மணி வரை காத்திருந்து தற்போது சாலையில் அமர்ந்துள்ளோம். முழுமையாக 5 மணி நேரம் கூட எங்களால் தூங்க முடிவதில்லை. குழந்தைகள், வயதானவர்கள் பெரிதும் அவதிப்பட்டு வருகின்றனர். எனவே இந்த பிரச்சனைக்கு முற்றுப்புள்ளி வைக்கவேண்டும்' என்றனர்.

### நாகூர் நகரக் கழகச் செயலாளர்

# எம்.ஆர்.செந்தில்குமார் தந்தை எம்.ராமு மறைவு!

## கழகத்தினர் அஞ்சலி

நாகை, செப். 27 -

நாகை மாவட்டம் நாகூர் நகரக் கழக செயலாளர் எம்.ஆர். செந்தில்குமார் தந்தை எம்.ராமு மறைவுக்கு கழகத்தினர் அஞ்சலி செலுத்தினர்.

நாகூர் நகரக் கழக செயலாளரும், நாகை நகர் மன்ற துணைத் தலைவருமான எம்.ஆர்.செந்தில்குமார், நாகூர் வார்டு கழக செயலாளர் எம்.ஆர். குணசீலன் ஆகியோர் தந்தை முன்னாள் நாகூர் வட்டக் கழக செயலாளர் எம்.ராமு 25.9.2026 அன்று மதியம் இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம் மறைந்த ராமுவிற்கு மகன்கள் எம்.ஆர்.செந்தில்குமார், எம்.ஆர்.குணசீலன் மகள்கள் வளர்மதிகருணாநிதி, கலைமதி செந்தில்குமார் ஆகியோர் உள்ளனர். நாகூர், திருமலையப்பன் சந்துவில் உள்ள எம்.ஆர்.செந்தில்குமார் இல்லத்தில் வைக்கப்பட்டிருந்த எம்.ராமு உடலுக்கு கழக நிர்வாகிகள், கழகத்தினர் நேரில் அஞ்சலி செலுத்தினர்.



மதுராந்தகம் தெற்கு ஒன்றியம் குன்னத்தூர் ஊராட்சி தச்சூர் கிராமம் பாகம் எண் 85ல் தாம்பரம் மாநகர செயலாளர் எஸ்.ஆர்.ராஜா மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலில் கழக வெற்றி வேட்பாளர் இ.பரந்தாமனை ஆதரித்து வீடு வீடாக சென்று கழக அரசின் சாதனைகளையும் தற்போது உள்ள அரசின் அவலங்களையும், பொது மக்களிடம் எடுத்துரைத்து உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார்.உடன் மாவட்ட பிரதிநிதி ஒன்றிய கவுன்சிலர் டி.ரோக்தும்மா,குன்னத்தூர் ஊராட்சி மன்ற தலைவர் ஜி.ஸ்டீபன்சவரி, தலைமை கி.வேல்மணி ஆகியோருடன் கிளை கழக செயலாளர்கள், தாம்பரம் மாநகர கழக தோழர்கள் மற்றும் தச்சூர் கிராம கழக தோழர்கள் உள்ளனர்.




மதுராந்தகம் சட்டமன்ற இடைத்தேர்தல் தொடர்பான கழக சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு ஆலோசனைக்கூட்டம் செயலாளர் டாக்டர் அ.சுபேர்கான் தலைமையில் மதுராந்தகம் ஷாலோம் கம்யூனிட்டி சென்டரில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கழக சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவின் மாநில துணைச் செயலாளர்கள் நூருல்லா, ராபர்ட் (e) ராஜதுரை, காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட அமைப்பாளர் நூருல் அமீன், வடக்கு மாவட்ட அமைப்பாளர் ஆல்பர்ட், விழுப்புரம் வடக்கு மாவட்ட அமைப்பாளர் அன்சாரி, சென்னை வடக்கு மாவட்ட அமைப்பாளர் எம்.ஆர்.டி.அப்துல் ரகுமான், திருவள்ளூர் மத்திய மாவட்ட அமைப்பாளர் ஷாஜகான், சேலம் கிழக்கு மாவட்ட அமைப்பாளர் சையத்சாவளி, மாவட்ட தலைவர், ஷேக் தாவுத், அமான், மாவட்ட துணை அமைப்பாளர்கள் அனீபா, எஸ்.கே.நசீர், அசோக் மேஷாக், சுபேர்அகமது, முகமது பாருக், இம்ரான் வேளச்சேரி நசீம் மற்றும் சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவின் மாவட்ட, ஒன்றிய, பகுதி கழக நிர்வாகிகளும் மற்றும் உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகளும் பல்வேறு சிறுபான்மையின அமைப்பின் பிரதிநிதிகளும் பங்கேற்றனர்.